# யாழ்ப்பாணக்குடாநாட்டில் போர்த்துக்கேயர்கால பண்பாட்டுச் செல்வாக்கு: ஒரு வரலாற்றுப் பார்வை

**K.Arunthavarajah**

*Deparrtment of Hisotry, University of Jaffna*

***Keywords:****பண்பாட்டு எச்சங்கள், கலையளிவுக்கொள்கை, மதப்பரப்புரைகள், பலாத்காரம்.*

## அறிமுகம்

பொதுவாகப் பண்பாடெனப்படுவது ஒரு குறிக்கப்பட்ட மக்கள் கூட்டமானது தனது சமூக வரலாற்று வளர்ச்சியினடியாகத் தோற்றுவித்துக்கொண்ட பௌதீகப் பொருட்கள், ஆத்மார்த்தக் கருத்துக்கள், மதநடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகியவற்றினது தொகுதியாகவும். ஒரு கூட்டத்தினரின் தொழிநுட்ப வளர்ச்சி, உற்பத்தி முறைமை, உற்பத்தி உறவுகள், கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், கலைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதியாகவும் விளங்குகின்றன.. இச்சொற் பிரயோகத்தினைப் பலப்படுத்தும் வகையில் போர்த்துக்கேயர்கால பண்பாட்டுச் செல்வாக்கானது யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு காத்திரமான இடத்தினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் தனித்துவமான வரலாற்றினைக் கொண்ட பிராந்தியங்களில் யாழ்ப்பாணக் குடாநாடும் ஒன்றாகும். இப்பிரதேசம் இந்தியாவின் தென்பகுதியுடன் குறிப்பாகத் தமிழகத்துக்கு அண்மையில் அமைந்திருந்தமையின் காரணமாக வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொடக்கம் அதிகளவுக்கு தமிழகத்தின் பல்வேறு வகையான செல்வாக்குக்கு உட்பட்ட பிராந்தியமாக இருந்து வந்துள்ளதனை கிடைக்கப்பெற்ற ஆதாரங்களின் அடிப்படையில் அறிந்துகொள்ள முடிகின்றது. இவை ஆக்கிரமிப்புக்கள், உதவிகோருதல், திருமணபந்தங்கள் வணிகம் போன்றவற்றினடிப்படையில் அமைந்திருந்தன. 16ஆம் நூற்றாண்டின் பின்பாக போர்த்துக்கேயர்கள், ஒல்லாந்தர்கள், ஆங்கிலேயர்கள்போன்ற ஐரோப்பிய இனத்தவர்களின் ஆதிக்கத்தின் கீழ் தொடர்ச்சியாகஇலங்கை மட்டுமன்றி யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் அடிமைப்பட்டுக் கிடந்ததன் பின்னணியில் இப்பகுதிகள் ஐரோப்பியர்களது பண்பாட்டுச் செல்வாக்கிற்கு உட்பட்ட பிராந்தியமாக மாறிக்கொண்டன.

போர்த்துக்கேயர்கள் இலங்கை வருவதற்கு முன்பாகவே இந்நாட்டினைப் பற்றியும் யாழ்ப்பாணத்தினைப் பற்றியும் அறிந்திருந்துபோதும் இவர்களது இலங்கை வருகையானது தற்செயலான நிகழ்வாக அமைந்த அதேநேரத்தில் இவர்களது யாழ்ப்பாணம் நோக்கிய ஆதிக்க நகர்வானது இலங்கை வருகை போன்று அமையாது திட்டமிட்ட அடிப்படையில் அமைந்திருந்தமையும் நோக்கத்தக்கது. போர்த்துக்கேயர்கள் இலங்கை வந்த சமயத்தில் கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் எனப் பிளவுபட்ட நிலையில் நாடு காணப்பட்டதுடன் இப்பிரிவுகளுக்கிடையிலே அரசியல் முரண்பாடுகளும் இருந்து வந்தன. இத்தகைய முரண்பாடுகளைத் தங்களது ஆதிக்க விஸ்தரிப்புக்குச் சாதகமான வகையில் பயன்படுத்திக்கொண்ட போர்த்துக்கேயர்கள் படிப்படியாக இலங்கையின் ஒவ்வொரு பகுதிகளையும் கைப்பற்றி வந்தபோதும் ஏறத்தாள 100 வருடங்களையும் தாண்டிய நிலையில் தான்அவர்களது கவனம் யாழ்ப்பாணத்தின் மீது சென்றதெனலாம்.

இவ்வாறு யாழ்ப்பாணத்தினை முற்றுமுழுதாக தங்களின் வசம் கொண்டு வந்த போர்த்துக்கேயர்கள் அங்கே வணிகத்துடன் மதப்பரப்புரைக்கான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்தனர். அவற்றில் ஓரளவுக்கு வெற்றியும் கண்டனர். இதற்கு யாழ்ப்பாண அரசின் பலவீனமும் யாழ்ப்பாணத்துச் சமூகத்தின் நடவடிக்கைகளும் அதற்கான சந்தர்ப்பத்தினை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்ததென்பதனை மறுப்பதற்கில்லை. இந்துமதத்திலும் இந்துப்பண்பாட்டிலும் ஊறிப்போயிருந்த யாழ்ப்பாண மக்களுக்கு கல்வியினையும் சலுகைகளையும் வழங்கியதோடுமட்டுமன்றிச் சில சந்தர்ப்பங்களில் பலாத்காரத்தினைப் பிரயோகிப்பதன் வாயிலாகவும் தங்களது அரசியல் நடவடிக்கையுடன் கூடவே பண்பாட்டுச் செல்வாக்கினையும் போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்படுத்தினர்இத்தகைய பண்பாட்டுச் செல்வாக்கானது மதம், மொழி, இலக்கியம். கலை, வாழ்க்கைமுறை போன்ற

வடிவங்களில் ஏற்படுத்தப்பட்டன. இவற்றில் பல அம்சங்கள் பின்னர் வந்த ஆட்சியாளர்களால் அழிக்கப்பட்ட நிலையில் காணப்பட அவற்றில் சில அம்சங்கள் இன்றுவரை யாழ்ப்பாணக் குடாநாட்டில் போர்த்துக்கேயர்களது ஆட்சியின் முக்கியத்துவத்தினையும் சிறப்பினையும் எடுத்துக்கூறுகின்ற வகையில் தலை நிமிர்ந்து நிற்கின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் குறிக்கப்பட்டதொரு காலப்பகுதியில் செல்வாக்குச் செலுத்திய போர்த்துக்கேயர்கள் அப்பகுதிகளில் பல வகையான பண்பாட்டு விழுமியங்களைவிட்டுச் சென்றுள்ளனர். ஏற்கனவே குறிப்பிட்டதன் பிரகாரம் பின்வந்த ஐரோப்பியர்களின் ஆட்சியில் இவற்றில் பல மாற்றியமைக்கப்பட்டன. சுதந்திரத்தின் பின்பாக காலத்துக்குக் காலம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் போர்த்துக்கேயர்கள் காலப்பகுதி தொடர்பாக பல்வேறுவகையான தகவல்கள் கிடைக்கப்பட்டு வந்தாலும் அவை ஒருங்கிணைக்கப்பட்டு அக்காலப் பண்பாட்டுச் செல்வாக்குத் தொடர்பான விடயங்கள் ஆழமாக ஆராயப்படவில்லை. இத்தகைய நிலையினை ஓரளவு பூர்த்தி செய்வதனை இக்கட்டுயைானது தனது நோக்கங்களிலொன்றாகக் கொண்டுள்ளது.
போர்த்துக்கேயர்களது ஆட்சியிலும் பின்வந்த காலங்களிலும் ஓரளவுக்காவது பாதுகாக்கப்பட்ட இத்தகைய பண்பாட்டு அம்சங்கள் தொடர்ந்து வந்த காலங்களில் சரியாகப் பேணப்படாது அவை சிதைவடைந்த நிலையில்இன்று காணப்படுகின்றன. அந்தவகையில் போர்த்துக்கேயர்கள் கால பண்பாட்டுச்சின்னங்கள் தொடர்பாகவும் அவற்றின் முக்கியத்துவம் தொடர்பாகவும் இக்கட்டுரை ஆராய்கின்றது. மேலும். இன்றுவரை இப்பண்பாட்டு அம்சங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தி வந்துள்ளதென்பதனை ஆராய்வதை மேலும் தனது இலக்குகளிலொன்றாக இக்கட்டுரை கொண்டுள்ளது.

போர்த்துக்கேயர்களது ஆட்சியில் யாழ்ப்பாணக்குடாநாட்டில் ஏற்பட்ட புதிய பண்பாட்டம்சங்களை கண்டறிவதும் அவை எந்தளவுக்குப் பாரம்பரிய யாழ்ப்பாணப் பண்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தின, அவை தற்காலத்திலும் தொடர்கின்றனவா என்பதனைக் கண்டறிவதும் அவற்றினை ஆவணப்படுத்துவதும் சமுதாயத்தின் கட்டாய தேவையாகும்.
யாழ்ப்பாணக் குடாநாட்டில் போர்த்துக்கேயர்களது ஆட்சிக்காலப்பகுதியில் ஏற்பட்ட பண்பாட்டுச் செல்வாக்கினை எடுத்துக்காட்டுதல், இன்றும் காணப்படுகின்ற பண்பாட்டுக்கூறுகளை வெளிக்கொணரல், கத்தோலிக்கமதம், கல்வி, மொழி, இலக்கியம், கலை, சமூகப்பழக்கவழக்கங்கள் போன்றவற்றினை ஆராய்வது ஆய்வுக்கட்டுரைக்கான கருதுகோளாகவும் அமைகின்றது.

**ஆய்வுமுறையியல்**
போர்த்துக்கேய யாழ்ப்பாண வரலாறு தொடர்பாக சமகாலத்தைய ஆதாரங்கள் பல போர்த்துக்கேயர்களது ஆதாரங்களாகவே அதிகளவில் காணப்படுகின்றன. இவற்றில் சில கோவாவிலும் பல விஸ்பனிலும் காணப்படுகின்றன. இவை முதல்தர ஆதாரங்களாகும். இருப்பினும் சமகாலத்தில் மதம் பரப்புரைக்காக வந்த குருமார்கள் எழுதிய குறிப்புக்கள்,கடிதங்கள்,நூல்கள், விஸ்பன் சென்று யாழ்ப்பாணந்தொடர்பான சான்றுகளைச் சேகரித்து எழுதப்பட்ட நூல்கள் மற்றும் கட்டுரைகள், போர்த்துக்கேயர்கால நினைவுச்சின்னங்கள், அழிபாடுகள் போன்றன பிரதான ஆதாரங்களாக என்னால் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் போர்த்துக்கேயர்களது காலந்தொடர்பாக பிற்பட்ட காலங்களில் எழுதப்பட்ட நூல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள், இத்துறையில் ஈடுபாடுபாடு கொண்ட அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் போன்றவர்களிடமிருந்து பல்வேறு தகவல்கள் பெறப்பட்டு இக்கட்டுரைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**சுருக்கமும் முடிவுரையும்**
வர்த்தகம், மதம் பரப்புகை ஆகிய இரண்டையும் அடிப்படையில் தங்களது நோக்கங்களாகக் கொண்டு இலங்கை வந்த போர்த்துக்கேயர்கள் தங்களது பண்பாடு சார்ந்த செல்வாக்கினை யாழ்ப்பாணக் குடாநாடு உள்ளிட்ட இலங்கையின் பல பகுதிகளிலும் பரப்பினர்.யாழ்ப்பாணக் குடாநாட்டில் போர்த்துக்கேயர்கள் கால அரசியல் மற்றும் நிர்வாக விடயங்கள் தொடர்பாகப் போதிய சான்றுகள் தேவைப்படுகின்ற அதேநேரத்தில் பண்பாட்டுச் செல்வாக்குத் தொடர்பான ஆதாரங்கள் அவற்றுடன் ஒப்பிடுகின்ற போது அதிகளவிலே அங்கு கிடைத்து வருகின்றமை

முக்கியமானதொரு அம்சமாகும். உணவு, உடை, பழக்கவழக்கங்கள், பேச்சு வழக்கு, திருமணம் போன்ற பல விடயங்கள் யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டில் மாற்றங்களினை ஏற்படுத்தியது. கத்தோலிக்க சமயமானது தலைநிமிர்ந்தது. கல்வி, சமூகம், பொருளாதாரம்,இலக்கியம் மொழி, கலைகளில் மாற்றங்கள் பல ஏற்பட்டன. போர்த்துக்கேயர்களது காலத்தில் அவர்களால் விதைக்கப்பட்ட பண்பாட்டு விழுமியங்கள் பின்வந்த காலங்களில் அழிக்கப்பட்டோ அல்லது கவனிக்கப்படாமலோ அல்லது மாற்றமடைந்த நிலையிலோ காணப்பட்டாலும் இன்றுவரை யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலில் அது அதிகளவிலான தாக்கத்தினை ஏற்படுத்திக்கொண்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

**References**


Perera,S.G.( 1948), *History of Ceylon,* Lake house, Colombo.

Pieries, ,P.E., (ed), *Ceylon and the Portuguese(1505-1658),* Sri Satguru publications, Delhi.

Marashall,R.,Singer. (1981), *The Emerging Elite( Study of political leadership in Ceylon),* Cambridge Massachusetta Institute of Technology press.

கிருஸ்ணராஜா,செ.,*இலங்கைவரலாறு,*(2000) பாகம்.02, பிறைநிலா வெளியீடு, யாழ்ப்பாணம.

Silva, K.M.De.(1981), *A History of Sri Lanka*, Oxford University Press, Delhi.

இராசநாயகம்,செ(1933).,*யாழ்ப்பாணச் சரித்திரம்,* யாழ்ப்பாணம்.

சிற்றம்பலம்,சி.க(1992).,*யாழ்ப்பாண இராச்சியம்,* யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.

Silva, Cosme.(1994), *Fidalgrs in the Kingdom of Jaffna of Jafanapatam*, Harwoots Publishers, Colombo.

குணசிங்கம், மு.(2008),*இலங்கையில் தமிழர்,* எம்.வி.வெளியீடு, சிட்னி, 2008.

Gunasingam, Murugar.(2005), *Primary Sources for History of the Sri Lankan Tamils*, M.V Publications Sydney.